



# சுசீந்திரம்



# வரலாறு









# பெண்மையின் மேன்மை

(அல்லது)

# சுசீந்திரம் ஸ்தலபுராணம்




ஆசிரியர்:

**K.T. தம்பி**

# பெண்மையின் மேன்மை

## (அல்லது)

# சுசீந்திரம் ஸ்தலபுராணம்

உள்ளடக்கம் பக்கம்


1. கானகமும், கற்புக்கரசியும் 1
2. தெய்வயாகமும், தேவேந்திரன் தோற்றமும் 3
3. பாத தீர்த்தத்தின் பெருமையும் பார்த்தோர் வியப்பும் 4
4. மும்மூர்திகளது தேவிமாரின் முகவாட்டமும் அனுசூயையின் அதிரற்ற வல்லமையும் 6
5. தேவிமார்களின் பொறாமை மும்மூர்திகளின் முயற்சியும் 8
6. கற்பின் பெருமையும் கிழவர்களது குழவிப்பருவமும் 9
7. அத்திரியின் வருகையும் அனுசூயையின் அறவொழுக்கமும் 11
8. கணவரைக் காணத் துயரமும் கண்டோர் கூற்றும் 14
9. கற்பரசியைக் காண்பதும் கற்பழிவதும் 17
10. முனிவர் வருகையும் முயன்ற கருமம் முடித்தலும் 19
11. மூர்த்திகள் முக்தி பெற்றதும் மற்றோர் மகிழ்வுற்றதும் 20

1. கௌதமர் சாபமும் தேவேந்திரன் துயரமும் 24
2. நாரதர் கூற்றும் அரசின் வரிசையும் 26
3. இந்திரன் வருகையும் நந்தி வேரின் மறுப்பும் 27
4. வரை ஏறுவதும் வரம் பெறுவதும் 28
5. கோட்டாறும் கொடிய சாபமும் 29
6. முனிவர்கள் ஏக்கமும் முன்னூற்று நங்கை தோற்றமும் 31
7. சாபமுக்தியும் சுசீந்திரமும் 32



ஆசிரியர்:

K.T.தம்பி


(உரிமை : ஆசிரியருக்கு)

விலை. ரூ. 20.00

# கற்பின் பெருமை

## பகுதி 1
## கானகமும் கற்புக்கரசியும்

பல்லோராலும் வியந்து பாராட்டும் சுசீந்தை மாநகரம் ஒரு காலத்தில் பெரும் காடாகவே இருந்தது. காடு என்று சொன்ன அளவில் சாதாரண ஒரு சிறு காடென்று நினைத்து விடலாகாது. துஷ்ட மிருகங்களின் ஆரவாரத்தாலும், வண்டுகளின் ரீங்கார ஒலியாலும், கதிரவன் கதிரை தடுத்து நிறுத்தும் வளம் பெற்று ஓங்கிய வன்மரங்களாலும் காண்போர் மனதை அச்சமுறச் செய்யும் வனப்புடையதாயிருந்தது.

எனினும் மங்கள வாத்தியம் முழங்குவது போல் மரங்களிலிருந்து புட்கள் சலசல சப்தத்துடன் கூறுவதும், வனதேவதையின் மந்தகாசத்தைப் போல் ஒவ்வொரு மரத்தின் உச்சியிலும் பலவகை மலர்கள் ஒரே சமயத்தில் மலர்ந்திருப்பதும் அம்மலர்கள் உதிர்ந்து மிருதுவான மெத்தை விரித்திருப்பதுமான ஓர் அழகிய இடம் இவ்வடவியில் இலங்கியது.

இங்கே பொற்கிரணங்களாகிய ரதத்திலேறி நீல நிற ஆகாய மார்க்கமாய் மெதுவாய்ப் பூமியில் வந்து இறங்குகின்ற உஷாதேவியின் தன்மையை நினைக்கும் பொழுது யாரோ ஒரு பெரியார் இக்கானகத்தில் வீற்றிருக்கிறாரென்று கூறாமலே விளங்கும்.

இப்பெரியார் யார் என்று ஆராய்வோமானால் கற்புக்கரசியாகிய அனுசூயா என்னும் பத்தினியோடு அன்புடன் அமர்ந்திருந்த அத்திரி முனிவரேயாவர்.

இப்பெரும் அடவியில்

'சத்தியமே ஜெயம்' என்றும் "அன்பே சிவம்" என்றும் "கணவனே கடவுள் என்றும் தியானித்துக் கொண்டிருக்கிற இவர்களேயன்றி வேறு மானிடர் யாரையும் காண்பதரிது.

இவ்விருவர்களும், அதிகாலையில் துயில்விட்டெழுந்து ஆகாய கங்கையை தியானித்து அஃதில் ஸ்நானம் செய்து தங்கள், தங்கள் நித்திய கர்மானுஷ்டங்களை செவ்வனே முடித்து கடவுள் தியானம் செய்து வந்தார்கள். ஆனால் அனுசூயா தேவியோ மண்ணால் குடம் திரட்டி ஆகாய கங்கையை அஃதில் கொணர்ந்து தன் கணவனை பூஜிப்பதிலும் பணிவிடை செய்வதிலும் தன் மனதைச் செலுத்திய வண்ணமாகவே இருந்தாள். இந்த ஆச்சிரமம் என்ற பெயரோடு ஓர் ஊர் இதன்மேற்றிசையில் இப்போதும் இருக்கிறது.

## முனிவர் யாகமும் மும்மூர்த்திகள் தோற்றமும்

இங்ஙனம் இவர்கள் அவ்வடவியில் இன்புற்றிருக்க, மாதம் மும்மாரி பொழிகின்ற மழையானதுயாது காரணத் தாலோ பெய்யாமலிருந்தது. இஃது கண்ட முனிவர் ஆறாத்துயரம் கொண்டு இதன் காரணம் யாதென்று அறிய உன்னி ஓர் யாகம் செய்வதற்கு உட்கொண்டார்.

பிரம்மதேவனை நினைத்துயாகம் புரிய பிரம்மன் பிரத்தியக்ஷமானார் முனிவர் அவ்விடம் மழை பெய்யாத காரணம் கேட்க, அவர் நமக்கு தெரியாதென்று கூறி மறைந்தார். பின்னர் வைகுண்டபதியைத் தியானிக்கவும் அவரும் தோன்றி அவ்வாறே கூறி மறைந்தார். இஃது கண்டு இளகிய மனதுடன் முனிவர் தம் எண்ணம்.

ஈடேறவும் மும்மூர்த்திகளையும் ஒருங்கே தியானித்தார். தியானத்தின் பயனாக மூவர்களும் முனிவர் முன்னே தோன்றினார்.

இவ்வாறு தன் எதிரில் தோன்றிய மும்மூர்த்திகளை அத்திரியானவர் அடிபணிந்து, தேவரீர்களே! மாதம் மும்மாரி பொழிகின்ற மழை யாது காரணம் பற்றியோ பெய்யாமலிருக்கிறது. இதன்காரணம் யாதென்று கூறி அடியேனது அகத்துயரை அகற்றுவீர் என்று வேண்டினார்.

இக்கூற்றை செவியுற்றதும் தங்களுக்கு இஃது விஷயம் தெரியாது. ஒருக்கால் கௌதமரின் சாபத்தால் தேவேந்திரன் வெகுண்டு இவ்வாறு செய்திருக்கலாம் என்றும் கருதுகிறோம். அதற்கு நீவிர் இமயமலையில் சென்று இந்திரனை வரவழைத்து உம்துயர் ஒழித்து உய்வீரெனப் பகர்ந்து அவ்விடம் விட்டு மூர்த்திகள் மூவரும் அகன்றனர்.

## தெய்வ யாகமும் தேவேந்திரன் தோற்றமும்

முனிவர் கருத்தை அறிந்த தேவியானவள் கணவனை, அடிபணிந்து, மன்னர் பிரானே! என்னைக் கருதி தங்கள் உள்ளத்தை வீணாக்க வேண்டாம், யாகம் நிறைவேறி வரும் வரையில் தங்களது கிருபையால் தயங்காது வாழ்வேன் என்று கூறி தன்னிடமிருந்த கங்கா தீர்த்தத்தால் கணவன் திருவடிகளை சுத்தி செய்து அப்பாதுகை நீரை குடத்தில் ஏந்தினாள்.

இஃதைக் கண்ணுற்ற முனிவர் ஆச்சரியங் கொண்டு பெண்ணே நீ செய்த இத்தொழிலின் நன்மை யாதென்று வினவ தேவியானவள், இத்தீர்த்தம் என்னிடம்

இருக்குமாயின் தாங்கள் என் அருகாமையில் அமர்ந்திருக்கும் போதுள்ள தைரியம் எனக்கேகுமென மறுமொழி பகர்ந்தாள்.

மனைவியின் மாசற்ற மனக்கருத்தை அறிந்த முனிவர் அவளிடம் விடைபெற்று அகமலர்ச்சியுடன் இமயமலைக்குச் சென்றார்.

மலையை அடைந்ததும் தேவர்களையும், முனிவர் களையும் எண்ணி ஓர் தெய்வ யாகம் செய்தார். யாக குண்டத்திலிருந்து அக்கினி தேவனானவன் தோன்றி மேலுலகமும் கீழுலகமும் ஒன்று போல ஓங்கி ஜ்வலிக்க, ஆமை ஆசனத்தில் அமர்ந்து அத்திரி முனிவர் ஆதிமந்திரத்தை உச்சரித்தார்.

மந்திரத்தின் அரும் பெரும் மகிமையாலோ அத்தி, இத்தி, ஆல், அரசு, புங்கு, புளி, பூலாத்தி என்ற சப்த மரங்களின் ஸ்ானித்தியத்தாலோ தேவர்களும், ரிஷிபுங்கவர்களும் அவ்விடம் வந்து அனுகினர். இவர்களில் மும்மூர்த்திகளும், தேவேந்திரனும் தோன்றாதிருக்க முனிவர் அவர்களையும் தியானித்து தனது கர்மத்தை நடத்தினார். தேவபதி தனக்கு நேர்ந்த சாபத்தால் வெளிவர வெட்கம் கொண்டானெனினும், அத்திரியின் அரும் முயற்சியால் அவர் முன் சென்றார். ஆனால் மும்மூர்த்திகள் வராததையிட்டு முனிவர் செய்கையினால் சோர்வு அடைந்திலர்.

## பாத தீர்த்தத்தின் பெருமையும் பார்த்தோர் வியப்பும்

யாகத்தின் தீவிரத்தால் மும்மூர்த்திகளும் யாகசாலைக்குப் போக விரும்பாது யாகத்தை அழிக்க

எண்ணங் கொண்டார்கள். இவ்வெண்ணத்தை நிறைவேற்றும் பொருட்டு திரிலோக சஞ்சாரியான நாரத முனியை மனத்திடை நாடினர். நாடவே முனிவரும் அவ்விடம் வந்துற்றார்.

நாரதர் அவர்களைப் பணிந்து, தன்னை விரும்பி அழைத்த காரணம் யாதென வினவினார். அப்போது சிவபெருமான் நாரதரைப்பார்த்து, "ஓ நாரதமுனியே ஞானாரண்ய வாசியும், தற்போது இமய மலைச்சாரலில் யாகம் செய்பவருமாகிய அத்திரி முனியை அங்கிருந்து அகற்ற வேண்டும்" என்று கூற நாரதரும் அதற்கிசைந்து தேவரீர்களே! இல்லறத்தில் அவர் வாழினும் பற்றற்ற துறவியே ஆவர். ஆயினும் உங்கள் கிருபையால் என் வேலையைப் பணிந்து பார்க்கிறேன்" எனப் பகர்ந்து மறைந்தார்.

இவ்வாறு கூறி நாரதர் ஞானாரண்யத்தில் வந்து சில முனிவர்களோடு அனுசூயா தேவியின் ஆச்சிரமம் அணுகினர்.

பெரியோர்களது வருகையைக் கண்ட தேவியானவள் வேண்டிய உபசாரங்களை செய்து விரும்பி வந்ததின் விபரம் யாதென வினவினாள் அம்மாளின் அமுதம் போன்ற மொழிகளைக் கேட்டதும் முனிவர்கள் மழையில்லாத காரணத்தால் விளைவு குன்றி பசிப்பிணியால் வருந்துகின்றோம் எப்படியும் கண்கூர்ந்து காப்பாற்ற வேண்டுகின்றோம் என்றார்கள். இரக்கத்தையும் இன்னலையும் கொடுக்கின்ற இவ்வார்த்தையைக் கேட்ட தேவியானவள் எந்தவிதமான தர்மத்துக்கு இச்சை, கொண்டிருக்கிறீர்கள் என்றாள்.

மனித சஞ்சாரமற்ற இப்பெரும் அடவியில் மருவியும், எந்தவிதமான தர்மம் வேண்டும் என்கிறாளே என வந்தோர் ஐயமுற்றார்கள். பின் அதனைச் சோதிக்க எண்ணி நாரதர் ஏவலால் ஒவ்வொருவராய் ஒவ்வொரு தர்மத்துக்கும் ஆசை கொண்டனர்.

"கணவனே கடவுள்" என்று தியானித்துக் கொண்டிருக்கும் அவ்வம்மையானவள், கணவனின் பாததீர்த்த பராசக்தியால் அவர்களின் எண்ணங்களை நிறைவேற்றினாள் தீர்த்த மகிமையால் மண்பல வடிவமாக மாறிய அற்புதத்தை அண்டையிலிருந்து கண்ணுற்ற நாரதர் கீழ் திசையை நாடிச்சென்றார் மூன்றுமைல் சென்றதும் மருங்கூர் என்னும் ஊர் வந்தார். அங்கு கடலை உருவாய் தென்பட்ட இரும்புத் துண்டுகளை எடுத்து இம்பர் உலகம் எய்தினர்.

## மும்மூர்த்திகளது தேவிமாரின் முகவாட்டமும் அனுசூயையின் அதிரற்ற வல்லமையும்

இம்பர் உலகம் எய்தின நாரதர் மும்மூர்த்திகள் இல்லாத தருணம் பார்த்து, அம்மையே! உலகத்தில் பெரியோர் என்று போற்றும் பெருமை வாய்ந்தவர்களே! எனக்கோர் உதவி புரியுங்கள் என வேண்ட அவர்கள் மனமிசைந்து தங்களால் இயன்ற உதவி புரிகிறோமென மொழிந்தார்கள் இதைக் கேட்ட நாரதர், தான் கொணர்ந்த இரும்புக் கடலையைப் பொரித்து, தர வேண்டுமென இரங்கினார்.

தேவிமார்கள் கடலையை வாங்கிப் பார்த்து "இஃதென்ன இரும்பை பொரிப்பது எங்ஙனம்? இஃது எங்களால் இயலாது உமக்கென்ன பித்து பிடித்ததா?" என்று மறுத்து விட்டனர்.

இதைக் கேட்ட இருடி இவ்விரும்புக் கடலையை நாம் பொரித்துக் கொண்டு வருகிறோம்; இதைத் தின்று பார்த்து என்னை மதியுங்கள் என்று கூறி பூலோகத்தில் வாழும் அனுசூயா தேவியிடம் வந்து அணுகினர்.

பயபக்தியுடன் பன்னசாலையில் வந்த நாரதரை தேவியானவள் பார்த்து "யாது காரணத்தால் இவ்விடம் வந்தீர்?" என்று கேட்க, நாரதர் தன் மனக் கருத்தை வெளியிட்டார்.

நமக்கோர் பிழைத்த காலமாயிருக்கிறது வருவதெல்லாம் சோதனையாகவே இருக்கிறது. வருவது வந்துதானே தீரும் என்று தனது கற்பின் வல்லமையால் இரும்புக் கடலையை வாங்கி கணவனைத் தியானித்து பாததீர்த்தத்தின் சக்தியால் பொரித்துக் கொடுத்தாள்.

கடலையை வாங்கினதும் அடங்கா மகிழ்ச்சியுடன் நாரதர் அம்மையரிடம் வந்து 'பித்துப்பிடித்தவன் பொரித்துக் கொண்டு வந்திருக்கும் கடலையை தின்று பெரியவர் என்ற அகந்தையை விடுங்கள் என்று கூறிய நாரதரைப் பார்த்து தேவிமார்கள் இஃது என்ன விந்தையாக இருக்கிறது! யார் இதை பொரித்து தந்தனள்? இரும்பைப் பொரிக்கவும் இவ்வுலகில் உடல் எடுத்தார் உளரோ? என அவாவுடன் கேட்டனர்.

இதற்கு நாரதர் 'அம்மையே! இரும்பை மட்டுமல்ல எந்தப் பொருளையும் எந்தவிதத் தன்மையிலாக்கவும் வல்லமை வாய்ந்த ஓர் தேவி அத்திரி முனிவரின் அரும் தவத்தால் அனுசூயா என்னும் பெயரோடு அவனியில் கற்புக்களஞ்சியமென விளங்குகின்றாள் அம்மாது இருக்குமளவும் உங்களுக்கு ஓர் விதமான பெருமையும்

சிறப்பும் கிடையாது; இஃது திண்ணம் என்று நாரதர் கூறியதைக் கேட்ட தேவிமார்கள் கடவுளது பத்தினிமார்களாக விளங்கும் நமக்கும் இக்குறை நேர்ந்ததோ என முகவாட்டமுற்றார்கள்.

## தேவிமார்களின் பொறாமை மும்மூர்த்திகளின் முயற்சியும்

இவர்கள் கடவுளின் பத்தினிகளாகக் காசினி யிலுள்ளோர் கழறினாலும், பெண்பால் என்ற பெயர்க்கிணங்க அனுசூயாவிடம் பொறாமை கொண்டார்கள் இங்ஙனம் தங்கள் நிலைக்குத் தகாத குணத்தைக் கொண்ட இம்மாதர்கள் அனுசூயையின் கற்பை அழிக்க வழியென்னவென நாரதரிடம் வேண்டினர். அதற்கு நாரதர் 'அம்மா! அஃது உங்களால் இயலாது உங்களது கணவரது அரும் முயற்சியால் ஒருவாறு கைகூடுமென எண்ணுகிறேன் அதனால் நீங்கள் உங்கள் கணவரிடம் அத்திரிமுனியின் மனைவியாயிருக்க நாங்கள் கருதுகிறோம் ஏனெனில் கற்புவாய்ந்த அவரது மனைவி இருக்குமளவும் உங்கள் பத்தினியாக அமைந்த எங்களுக்கு பயனில்லை. ஆகையால் அவளது கற்பை அளித்தாலன்றி நாங்கள் உயிர் தரித்திரோம் என உணர்த்தினால் அவர்கள் உங்கள் எண்ணத்தை ஒருவாறு முடிக்கக்கூடும் என்று நாரதர் மொழிந்து அங்கிருந்து அகன்றார்.

நாரதர் சென்றதும் தங்கள் கணவர் எப்போது வருவார் என தயங்கிக் கொண்டிருக்கும் தருவாயில் தம் நாயகர்கள் முன்னே தோன்றினார்கள். ஒவ்வொருவரும் தமக்கு ஏற்பட்ட இன்னலை இயம்ப மூவரும் அவர்களது

வருத்தத்தை தீர்ப்போமென வாக்குறுதி செய்து அங்கிருந்து அனுசூயா அமரும் ஆரண்யம் அடைந்தனர்.

மங்கை வார்த்தை கேட்டு மனமிளகி முயல்வோர் மந்தபுத்திகளாம் என்பதை நினையாது கடவுள் தன்மை வாய்ந்த இவர்களது நிலை வரும் "விதி இராத்தங்காது" என்னும் முதுமொழிக்கிணங்கியே இருந்தது அந்தோ! மும்மூர்த்திகளே இங்ஙனம் மோகங்கொள்வாராயின் மானிடப் பிறவிவாய்ந்த நம்மவர்களின் நிலையை எடுத்து இயம்பவும் கூடுமோ.

## கற்பின் பெருமையும் கிழவர்களது குழவிப்பருவமும்

மூவரும் முதுகிழவனைப் போல வேடம் பூண்டு அனுசூயா தேவியிடம் சென்றனர் தன்னகத்தே வரும் யாவருக்கும் தடையின்றி உபசரிக்கும் உத்தமியாகிய தேவியானவள் இவர்களைக் கண்டதும் அவர்களுக்கு வேண்டிய பணிவிடை செய்தனர். உடனே அவர்கள் பசியின் கொடுமையால் இப்பகுதியிடம் புகுந்தோமெனப் புகல உடன்பட்ட உள்ளத்துடையவளாய் நித்திய கர்மானுஷ்டானங்களை நிறைவேற்றும் பொருட்டு கூறினாள்.

மூவரும் அருகாமையிலுள்ள பிரஞ்ஞாத தீர்த்தத்தில் வந்து ஸ்நானம் செய்து அனுஷ்டானங்களை முடித்து ஆச்சிரமம் சென்றனர். இத்தருணம் தேவியானவள் கணவனது பாததீர்த்த பாராசக்தியால் அறுசுவை உண்டிகளை அமுதம் போன்று படைத்தாள். அவர்கள் வந்ததும் ஆசனம் இட்டு அமரச் செய்து இலையிட்டு இலவணம் பறிமாறி சாதம் கொணரச் சித்தமானாள்.

களங்க மனத்தினராய் கிழவர் மூவரும் திடுக்கிட்டார் போல எழுந்துவிட்டார்கள் இஃது கண்டதும் என்ன மோசம் செய்தோமெனக் கவலையுடன் தேவியானவள் யாது நேர்ந்ததென்று அவர்களிடம் அடிபணிந்து அழுது கேட்டனள். அதற்கு அவர்கள் மழையில்லா காரணத்தால் மண்டலம் ஒன்று உணவில்லாமல் வருந்திய நாங்கள் உண்ண வேண்டுமானால் ஒரு நோன்பு உண்டு. அந்நோன்பு முடித்தாலன்றி உணவு ஏற்றுக் கொள்ளக் கூடாதென பதில் கூறினர்.

எவ்விதமாகிய நோன்பானாலும் இவ்விடம் அனுஷ்டித்து பசிப்பிணியை தீர்த்துப் போவதே பாா்ப்பனராகிய உங்கள் கடமையென, மொழிந்தாள். மாசற்ற மனமுடைய மங்கையின் கூற்றை கற்புக்கரசியெனக் கனவிலும் நினையாத இவர்கள் பிறக்கும்போது ஏக கோலத்துடன் எழுந்தனையோ அத்தன்மையில் அன்னம் பரிமாறினால் அருந்துவோமென வருந்துயரை எண்ணாது உயரிய பெண்பாலிடம் மொழிந்தனர்.

இஃதை செவியுற்றதும் என்ன மாயமோ நமக்கோர் துன்ப காலமென தளர்ந்த மனதுடன் தாழ்ந்த முகத்தினராய் திகைத்தனள் சற்று நேரம் பொறுத்ததும், திகைத்தால் பயன் யாது கணவனே கடவுள் என்றும், கற்பே நன்னெறியென்றும் நினைத்து நாள் போக்கும் யான் எனது கற்பின் பெருமையால் அவர்கள் கூற்றுக்கிணங்க அவர்களது ஆசையை முடிப்பேன்; அவ்வாறு செய்யாவிடில் பெண்ணுருக் கொண்டயான் கற்பிணி பூண்டதினால் காசினியில்யாது பயன்? மனமே உன் கணவனின் பாததீர்த்தமானது உன் அருகாமையில் இருக்கும்போது

உனக்கு எங்ஙனம் துயர் நேரிடும் என்று மனவுறுதிப்பட்டு பாததீர்த்தத்தைக் கையில் எடுத்துக் கணவனை தியானித்து குழந்தையாக மாறக்கடவதென கிழவர்களின் தலைமேல் தெளித்தனள்.

என்ன அதிசயம்! பெண்களின் கற்புக்கு இத்தனை பெருமையுண்டோ? கற்பில்லா பெண்களே! இக்கருத்தை நினையுங்கள் ஒன்று தோன்றுமாறு ஆக்கல், அழித்தல், பேணுதல் என முத்தொழிலையும் புரியும் மும்மூர்த்திகளும் கற்புக்களஞ்சியமான இப்பெண்மணியால் பால்மணம் மாறாக் குழவியானார்கள் என்று கூற வேண்டியதாயிற்று.

குழவிப்பருவம் வாய்ந்த இவர்களைத் தேவியானவள் அவர்கள் எண்ணப்படியே பால் ஊட்டி பசிப்பிணியாற்றி தனது கற்பை காசினியில் நிலை நாட்டினாள். அந்தோ! கற்பின் பெருமையே பெருமை.

## அத்திரியின் வருகையும் அனுசூயையின் அறவொழுக்கமும்

குழந்தைகளாய் அடையும் குதூகலம் உணர்ந்திராத அவ்வம்மையார் இக்குழந்தைகளை ஈன்றெடுத்த மாதாவைப் போல இனிது காப்பாற்றினாள் சற்று நேரத்தில் குழந்தைகள் கண்துஞ்சவும் களிப்புடன் துயிலச்செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் கணவனை தியானித்து மூன்று தொட்டில்கள் வரவழைத்து குழந்தைகளை அதில் அமர்த்தினாள்.

கற்புடைய மாதர்களுக்கு எதுதான் கைகூடாது! கண்ணகி என்ற கற்புக் கடவுள் மதுரை மாநகரை

சொல்லளவிய நீறாக்கவில்லையா! நிற்க

தொட்டிலில் கிடக்கும் குழந்தையைக் கண்டு ஆனந்தக்கடலில் ஆழ்ந்து அரும்பொருள் வாய்ந்த மொழிகளால் அம்மையானவள் தாலாட்டினாள். இவ்வினிய குரலின் இனிமை கேட்டு, இஃது யார் ஒலி என்று அறிய நாரதர் தன் வீணாகானத்தோடு அங்கு வந்து சேர்ந்தார்.

அவர் ஆசிரமத்துக்குள் யாரும் அறியாது உற்றுப் பார்க்கும்போது தொட்டில்களையும் பக்கத்தில் அன்புடன் அமர்ந்து தாலாட்டும் அனுசூயையும் கண்ணுற்று ஆச்சரியம் கொண்டு அத்திரி முனிவர் அமரும் யாகசாலைக்குச் சென்றார்.

இதுகாறும் தன்னை நாடிவராது இன்று எய்திய நாரதரைப் பார்த்து முனிவர் வேண்டிய உபசாரம் செய்து ஆசனத்தில் அமர்த்தினர். அமர்ந்த நாரதர் அத்திரியே என அழைத்து, உமது உபசாரம் யாவும் நன்றா யிருக்கின்றது. இதன் பயனையும் பெருமையையும் நன்கு அறிந்து கொண்டேன். உமது பத்தினியாகிய அனுசூயா தேவியானவள் தன் கணவன் தன்னை விட்டகல்வது எந்நாளோ என்று ஏக்கமுற்றிருந்தாள். நீவிர் அவ்விடம் விட்டு அகலும் தருவாயில் தகும் நீதிகளைக் கூறி தமது எண்ணம் நிறைவேறியதென அகமகிழ்ந்தாள் மகிழ்ந்ததின் பயனாய் மூன்று மகவை ஈன்றெடுத்து அக்குழந்தையை அழகிய தொட்டில்களில் அமர்த்தி தாலாட்டுகிறாள். மூன்று விதமான குழந்தைகள் தொட்டிலில் அயர்ந்து நித்திரை செய்வதைக் கண்டு வியப்புற்றேனென்று கோபத்துடனும் வன்மையுடனும் கூறி அவ்விடம் விட்டுப் பிரிந்தார்.

இதைச் செவியுற்ற அத்திரி முனிவர் தனது தேவி பத்தினிக்கரசி என அறிந்திருந்தும் தான் மிகுந்த அறிவாளியாயிருந்தும் நாரதர் சொல் வன்மையால் யாகத்தை நிறுத்தி தனது உறவிடம் உற்றார், அத்தோடு அவ்விடம் இருந்தவர்கள் அவரவர் இடம் புகுந்தனர்.

முனிவர்களே சொல்வன்மையால் மயங்குவாராயின் மற்றவரியல்பை செப்பவும் வேண்டுமோ? இவ்வலையில் ஈடுபடாதவர் சுருங்கக் கூறின் இல்லை யென்றே கூறலாம். தமிழ்ப் புலமை வாய்ந்த அதி வீரராம் பாண்டியர் தாம் இயற்றிய நறுந்தொகை என்னும் நூலில் "பொய்யுடைய ஒருவன் சொல்வன்மையினால் மெய் போலுமே" என்று மொழிந்துள்ளார். இந்நீதி பற்றியே முனிவர் நாரதரின் சொல்வன்மையினால் மெய் என்று நம்பி மனம் தடுமாறினார்.

முனிவர் ஆசிரமத்தின் அருகாமையில் வந்து 'அடி அனுசூயா' என்று அழைக்கவும் அடி என்ற வார்த்தையைக் கேட்டுஅம்மையானவள் அச்சம் கொண்டாளெனினும் ஆவைக் கண்ட கன்றைப் போல அகமகிழ்ந்து அடிபணிந்தாள் தம்முன் வணக்கத்துடன் கைகுவித்து நிற்கும் தேவியைப் பார்த்து, பெண்ணே நம் ஆசிரமத்தில் அமர்ந்திருக்கும் தொட்டில்களில் தூங்கும் குழந்தைகளின் வரலாற்றைக் கூறாவிடில் அகலியாதேவிக்கு நேர்ந்த ஆபத்து விளையும் என வெகுண்டார்.

தன் கணவன் இதுகாறும் கூறாத 'அடி என்ற அழைப்புக்குறியையும் அவரது மனப்பான்மையையும் கண்ணுற்ற தேவியானவள், யார் செய்த தீவினையோ இவ்வாறு மூண்டதென வருத்தம் கொண்டாளாயினும்,

கணவனது கோபத்தை அகற்றுவது கற்புடை மாதர்க்கு அழகென மதித்து குழந்தைகளின் வரலாற்றையும் மற்ற செய்திகளையும் இதமாகக் கூறி ஆறாத கோபத்தை நீக்கினாள்.

தனது பத்தினியின் தன்மையையும் அறநெறியையும் கேள்வியுற்ற முனிவர், என்ன மோசம் செய்தேன்! துறவியாயும், ஞானியாயும் இருந்து என்ன பேதமையாய் விட்டேன். தணியத்தகுவது கோபமென அறிந்திருந்தும் யாது பயன்! "கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரிப்பதே மெய்" என்ற தத்துவத்தை உணர்ந்திருந்தும் என்ன தீவினைக்கு ஆளாகிவிட்டேன் கேலி வார்த்தை கேட்பதால் வரும் பயன் இதுவா! சொல்லுக்கு இவ்வளவு வன்மையும் உண்டா என்று பலவாறு கவலை கொண்டாராயினும் மனைவியின்மன ஊக்கத்தையும் மாண்பமைந்த கற்பையும் கண்டு மனம் தேறி முன்போலவே இன்புற்று வாழ்ந்தார்.

## கணவரைக் காணாத் துயரமும் கண்டோர் கூற்றும்

நாரதர் தன் காரியம் கைகூடியதென அகமகிழ்ந்து தேவிமார்களிடம் சென்றார் அவர்கள் தங்கள் கணவர் இதுகாறும் வராமையால் அனுசூயையின் கற்பை அழித்திருக்கக்கூடுமென்று ஓர் பக்கம் ஆனந்தமும் மற்றோர் பக்கம் இன்னும் நம் நாயகர் வரக் காணவில்லையே என்ன மோசம் நேர்ந்ததோவென ஆறாத்துயரமும் அடைந்தனர்.

இவர்களது நிலையை சற்று ஆராயுங்கால், உலகம்

இன்ப துன்பங்கள் நிறைந்தது இதனால் இன்பம் வந்ததென இறுமாப்புக் கொள்ளவோ துன்பம் வந்ததெனத் துயரடையவோ வேண்டாமென்று மண்ணுல கத்தாருக்கு புகட்டுகிறார்களோ எனத் தோன்றிடும்.

இத்தருணம் நாரதர் வருகையைக் கண்டதும் தேவிமார்கள், எங்கள் கணவர்கள் இதுவரையிலும் வரக்காணோம்; ஆகையால் அனுசூயையின் கற்பு அழிந்திருக்குமென எண்ணுகிறோம்; திரிலோக சஞ்சாரியான உமக்கு தெரியாதிருக்குமோ என்று கூற, நாரதர் நமக்கொன்றும் தெரியாது ஆயினும் வீணா நாதத்தால் வீற்றிருக்கும் இடத்தை ஒருவாறு பாம்பாட்டி போல பகர்வேனென விளம்பி அதன் நாதத்தை முழக்கினார்.

இங்ஙனம் நாரதர் வீணையை முழக்கிக் கொண்டு அம்மா! அவர்கள் இருக்கும் இடம் அறிந்தேன் எனக்கூற, தேவிமார்கள், முனிவரே! அவர்கள் எங்கே என்ன வேலையில் அமர்ந்திருக்கின்றனர் எப்போது வருவார்? என மிக ஆத்திரத்துடன் கேட்டனர். இதற்கு நாரதர் பின்வருமாறு கூறுகிறார். தேவிமார்களே உங்கள் கணவர்கள் ஒரேயிடத்தில் உங்கள் மாமனும் மாமியும் இருக்கிறார்கள்; அது ஞானகானவனத்திலே என்றார்.

இதைக்கேட்டு அவர்கள் கூறியது சரியாக இருக்கலாம். ஆனால் எங்களுக்கு மாமன் மாமியார் கிடையாதே; அவ்விதம் ஒருக்கால் இருப்பினும் மூன்று மாமன்மார்கள் வேண்டும் அதனால் உம்முடைய கூற்றில் சில ஐயமும் எங்கள் மனதில் தென்பட்டிருக்கிறது என எடுத்தியம்பினர்.

உங்களுக்கு ஏற்பட்ட ஐயத்தை நான் கூறிய இடத்தில் சென்று பார்த்து மெய்யோ பொய்யோ வெனத் திடப்படுத்துங்கள் என்று நாரதர் வீணையை முழக்கிக் கொண்டு பின்னும் கூறுகிறார் அம்மா இன்னும் சொல்கிறேன் கவனியுங்கள், ஓர் மரத்திலிருந்து பிரிந்து சென்ற மூன்று கிளைகளில் தொங்கவிடப்பட்டிருக்கும் தொட்டில்களில் உங்கள் கணவர்கள் குழந்தை வடிவமாக நித்திரை செய்கிறார்கள் என்று நாரதர் கூறினார்.

இங்ஙனம் கண்டது போல் கூறும் நாரதரைப் பார்த்து தேவிமார்கள், அவர்களை வருவிப்பது எங்ஙனம்? முன்சொல்லிய உபாயத்தைப்போல் உயிர் பிழைக்க ஒன்று உணர்த்த வேண்டுமென்று மிகுந்த துயரத்துடன் கூறினார்கள்.

அதற்கு நாரதர் "அம்மா! நீங்கள் மாறுவேடம் பூண்டு பூலோகத்தில் இருக்கும் ஞானகான வனத்திலேகி அங்கு அமர்ந்திருக்கும் அனுசூயா தேவியை அடிபணியுங்கள் பின் பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி என்ற உங்கள் பெயர் பெருமையை அகற்றி அந்த அம்மையாரிடம் மாங்கல்ய தர்மம் கேளுங்கள் அந்த அம்மாள் உங்கள் கணவரைத் தந்து கவலையைத் தீர்ப்பாள் எனக்கூறி மறைந்தார்.

மறைந்ததும் தேவர்களிடத்திலும் முனிவர்களிடத்திலும் சென்று நடந்த செய்திகளைக் கூறி நம் தாய்மார்கள் ஞானாரண்யம் செல்வதைக் கவனியுங்கள் என்றுக் கூறிவிட்டுப் போய்விட்டார்.

தேவிமார்களோ, நாரதர் கூற்றுக்கிணங்க ஞானாரண்யம்

போகும்போது வரும் மத்தியில் தேவர்களும், முனிபுங்கவர்களும் கண்டு அம்மா! தேவிமார்களே!

இதுவும் ஓர் செயலோ? இருக்கட்டும் இனி நீங்கள் உங்கள் அகந்தையைத் தவிர்த்து எண்ணிய எண்ணத்தை முடித்து வாருங்கள் என்று வினயமாகக் கூறி அனுப்பினார்கள்.

## கற்பரசியைக் காண்பதும் கற்பழிவதும்

முத்தொழிலையும் முடிவுபெறச் செய்ய வன்மை பொருந்திய மும்மூர்த்தியின் பத்தினிமார்களும் இதுவும் ஓர் காலக்கொடுமையே என எண்ணி, தங்கள் தங்கள் உருவை மாற்றிக் கொண்டு அனுசூயாதேவி இருக்கும் ஆச்சிரமம் வந்தனர் முன்போலவே ஸ்திரிபத்தினியோ அவர்களை உபசரித்து யாது காரணம் பற்றி இங்கு வந்தீர்? உங்கள் கணவர் எங்கே? எனப்பகர வந்தவர்கள் பயபக்தியுடன், மாங்கல்ய தர்மத்துக்காக இவ்வாசிரமம் புகுந்தோமெனக் கூறினர். இதைக்கேட்டதும் தேவியானவள் அடங்கா மகிழ்ச்சியோடு துஷ்ட விலங்குகளாலும் கொடியவிஷ ஜந்துக்களாலும் நிறைந்த இவ்வடவியில் என்னையும் என் நாயகனையுமின்றி வேறுயாரையும் காண்பதரிது எதிலும் இஃது ஓர் ஆசிரமம் இத்தன்மை வாய்ந்த இடத்தில் புகுந்து நீங்கள் உங்களை போன்ற பெண்பாலாகிய என்னிடம் இங்ஙனம் உரைப்பது உரியதா? அவ்வாறு கேட்பினும் என்னால் அஃது இயலுமோ? நீங்களே நினைத்து கூறுங்கள்.

அம்மா கற்புக்கரசியே! உங்களிடம் எங்கள் கணவர்களாகிய மும்மூர்த்திகளும் இவ்விடம் உள்ள

தொட்டில்களில் நித்திரை செய்கிறார்களென்றும் நாரதர் கூற இவண் வந்து இத்தர்மத்தை வினவினோம் எங்கள் வேண்டுகோளுக்கிணங்க அவர்களைத் தந்து எங்கள் துயரை அகற்றாவிடில் அண்டங்கள் அனைத்தும் துன்பமடையுமென கூறினார்கள்.

இவ்வார்த்தைக்கு தேவி உடன்பட்டு தொட்டில்களைக் காட்டி "உங்கள் கணவரை எடுத்து உயிர்பிழையுங்கள்" என உணர்த்தினாள். யாவரும் ஆனந்தக்கடலில் மூழ்கி குழந்தைகளை எடுத்து தங்கள் உறைவிடம் போக எண்ணினார்.

இதைக் கண்ணுற்ற கற்பரசியானவள் இவர்களா லன்றோ நமது இடுக்கண் நேர்ந்தது அதனால் அவர்களை இங்ஙனம் விடுவது சரியன்று என்ற எண்ணத்துடன் தங்கள் கணவர்கள் என்னிலையில் என்னிடம் ஏகினார்களோ அன்னிலையில் அவர்களை ஆக்க வேண்டும்; அல்லாவிடில் வினை விதைத்தவன் வினை அறுப்பது போல ஆகிவிடுமோ என மனதில் நினைத்து அக்கினி பகவானைத் தியானித்தாள்.

அவர் வந்ததும் இப்பெண்களிடம் இருக்கும் குழந்தைகள் சுய உருவத்துடன் மின்னல் போல அவர்கட்கு காட்சி கொடுத்து முன்போல் தொட்டிலில் தூங்கும்படிச் செய்வாய் என அனுசூயா தேவியானவள் கூற அவரும் அப்படியே செய்தார்.

தங்கள் கைக்கொண்டு களிப்புற்ற குழந்தைகள் தங்கள் கணவரல்லாது இருந்தமையால் இடி விழுந்தாற்போல் பதறினார்கள். சிவனை லெக்ஷ்மி தேவியும் பிரம்மனை பார்வதி தேவியும், விஷ்ணுவை ஸரஸ்வதி தேவியும்

எடுத்தாலுள்ள கற்பழிவாலாகும். இதனால் கணவரல்லாரைக் கணவனாகப் பாவித்துக் கண்டு களித்தோமே என வெட்கமும் ஐயமும் பூண்டு கற்பழிந்தோமெனக் கலங்கினர். மேலும் பெருமையின் பயன் இதுவோ எனக் கருதினர்.

## முனிவர் வருகையும் முயன்ற கருமம் முடித்தலும்

இதனிடையில் நாரதர் இவர்கள் முன்தோன்றி நான் கூறியது மெய்தானா? நினைத்த காரியம் முடிந்ததா? என்று தமக்கொன்றும் தெரியாதவர்போல் கூற அவர்கள் தம்தம் தாபத்தைக் கூறி தளர்வுற்றார்கள்.

இதைக் கேட்டதும், நாரதர் கவலை வேண்டாம் உங்களுக்கு நேர்ந்த குறையை நீக்கும் பொருட்டு ஓர் சாந்தி செய்ய வேண்டுமென்று அவர்களை பிரஞ்ஞான தீர்த்தக்கரைக்கு அழைத்து வந்து அதன் மூன்று கோணிலும் ஹோமகுண்டங்கள் எடுத்தார். ஹோமத்தி லிருந்து தோன்றிய ஹோம அக்கினியில் அவர்களை மூழ்கச் செய்து கற்பழிவை அகற்றினார்.

பின்னும் இத்துடன் உங்கள் எண்ணம் ஈடேறவில்லை, கணவனைக் காண்பதற்கு திருவாதிரை நோன்பு ஒன்று எடுக்கவேண்டுமென்று இயம்ப அவர்கள் அவ்வாறே அந்நோன்பு எடுத்தார்கள். ஆகவே திருவாதிரை நாள் இவ்வூரில் ஒரு விசேஷ நாளாகும். அதிலும் மார்கழி மாதத்து திருவாதிரை நாள் ஓர் புண்ணிய நாளெனக் கருதி பற்பல இடங்களிலிருந்து ஆட்கள் தெரிசனத்துக்கு வருவதுண்டு.

இத்தீர்த்தம் இப்பொழுது தெப்பக்குளம் என்ற பெயரோடு மத்தியில் அழகியதோர் மண்டபம் விளங்கப்பெற்று இவ்வூர் ஆலயத்தின் வடபாகம் விளங்குகிறது. இதில் சித்திரை மாதந்தோறும் தெப்பத்திருவிழா என்ற திருவிழா நடைபெறுவதுண்டு.

திருவாதிரை நோன்பு முடிந்ததும் நாரதர் தேவியர்களை அழைத்துக்கொண்டு ஆசிரமத்தின் அருகாமையில் சென்றதும் அவர்களை மறைந்திருக்க அருளிதான் மட்டும் தபோதனர் தங்கியிருக்கும் ஆசிரமம் சென்றார்.

## மூர்த்திகள் முக்தி பெற்றதும் மற்றோர் மகிழ்வுற்றதும்

தனிமையாகச் சென்ற நாரதர் திடுக்கத்துடனே அனுசூயா தேவி இல்லாத தருணம் பார்த்து அத்திரி முனியிடம் சென்று கண்டார்.

அவனியிலுள்ளோரடையாத அதிஷ்டம் பெற்ற அந்தணமுனிவரே! என்னை ஆனந்திப்பித்து ஆதரிக்க அவாவுகிறேன். தாணுவும், மாலுவும், அயனுமாகி முத்தொழில் புரிவோர் மனைவிமார்கள் முகவாட்டத்துடன் அதோ நிற்கிறார்கள் அவர்களின் வாட்டத்தை அகற்றி என் பேரில் நினைத்திருக்கும் வெகுளியை விரட்டுவீர் அவர்கள் கணவர் மூவரும் களிப்போடு அதோ இருக்கும் தொட்டிலில் அயர்ந்த நித்திரையில் அமர்ந்து இருக்கின்றனர். மூர்த்தி வடிவாயிருக்கும் அவர்களை சுய உருவாக்கி சூரியன் உதிப்பதற்குள்ளே தந்து மகிழ்விக்க வேண்டுமென தளர்ந்த உடலிலும் நடுங்கிய மனத்துடனும் நாரதர் வேண்டினார்.

இந்த வேண்டுகோளுக்கிணங்க அத்திரி முனிவர் உள்ளே பார்த்து, அன்புக்குறைவிடமே அனுசூயே! என்று அழைத்ததும் நாரதர் நவிலாமே நகர்ந்து விட்டார்.

ஏனெனில் யான்இவ்வளவு இடர்களை இயற்றிபல்லோர் மனமும் பதறும்படி செய்தேன். அத்துடன் அத்திரியின் யாகத்தையும் அழித்தேன் இவ்வித இடுக்கண்களைச் செய்த என்னைத் தேவியானவள் கண்ணுற்றால் யான்படும்பாடு யாதோ? யான் அறியேன் முத்தொழில் புரியும் ஹரன் ஹரியோர்களுக்கே இத்துன்பமானால் எனக்கு ஏகுவதை எண்ணவும் கூடுமோ? அவர்களது துயரை மாற்ற பத்தினிமார்கள் முயன்றார்கள் எனக்குண்டாகும் இன்னலைப்போக்க பெண்டீரோ பிள்ளையோ இல்லாத ஏகான்தவாசியாயிருக்கிறேன் மற்றோர் அன்புபூண்டு ஆதரிப்பார் என்று நினைத்தால் என் பெயர் கேட்ட அளவில் மூவுலகத்தாரும் முடிந்தானோ முனிவன் என்று மொழிவார்களே ஒழியகனிந்த மனத்தின்ராய் காப்பார் இல்லையெனக் கருதியே நாரதர் பதறி ஓடினார்.

ஓடியதும், தேவிமார்களிடம் சென்று நடந்த செய்திகளை தெரிவித்து மறைந்தார்.

இது இவ்வாறிருக்க, அனுசூயா தேவியானவள் அகமகிழ்ச்சியுடன் அத்திரியின் முன்னே தோன்றினாள்.

பக்கத்திலே பயபக்தியுடன் பணிந்து நிற்கும் தேவியைப் பார்த்து முனிவர் தொட்டிலில் கிடக்கும் குழந்தைகளை சுயம்பிரகாச உருவாக்கக் கடவாய் என்று வேண்ட,

கணவன் சொற்படியே பாததீர்த்த மகிமையால் குழவிகள் மூவர்களையும், அவரவர் வடிவத்திலாக்கினாள்.

தங்கள் கணவரைக் கண்டதும் துயர் நீங்கி தேவிமார்கள் மூவரும் அவர்களது கணவரின் அருகில் அமர்ந்தனர். அதைக் கண்டதும் முனிவர் தன் பத்தினியுடன் வலம் வந்த வண்ணமாகவே இருந்தார் இங்ஙனம் யாபேரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

## முடிவுரை

மூவரும் ஒருங்கே காட்சி கொடுக்கும்படி இந்நகருக்கமைந்த நன்மையை எண்ணியும் தாணுமாலையனைத் தளர்வின்றி தினமும் தியானித்தும் இக்கதையின் முடிவுரை கூற முயன்றேன்.

மூர்த்திகள் மூவரும் தங்கள் பத்தினிமார்களுடன் அமர்ந்திருக்கும் பொழுது தமக்குள்ளே ஓர் எண்ணம் கொண்டார். நாம் இவ்வளவு காலம் குழந்தை போல கிடந்து அவர்களை சொல்லாலும் செயலாலும் செயலற்றவர்களாக்கினோம். இனி நாம் இங்ஙனம் போவது தர்மமன்று ஆகவே மூவர்களும் தாங்கள் அம்சமாகிய சந்திரன், தாத்தாத்திரேயன், துர்வாஸா நாமங்களையுடைய மூன்று குழந்தைகளை முனிவருக்குக் கொடுத்தருளி ஆசீர்வதித்தனர்.

பின்னர் முனிவர் பத்தினியுடனும் குழந்தைகளுடனும் சாஷ்டாங்கம் பணிந்து இதுபோன்ற தரிசனம் அடியார்கள் அடையும் நாள் எந்நாள் என்று வேண்டினார் அதற்கு

அவர்கள் மார்கழி மாதம் அசுபதி நஷத்திரத்தன்று அதிகாலை கருடரூபமாய் வருவோம் வந்து பார்த்துக் கொள்ளுங்கள் என்று ஆசி கூறி அவ்விடம் விட்டு அகல எண்ணினார்.

ஆகவே, இவ்வூரில் மார்கழி மாதம் ஐந்தாம் திருவிழா இந்த ஆகமம் ஒட்டியே நடக்கிறது.

இந்த சரித்திரத்தைப் படிப்போரும் கேட்போரும் இன்னலின்றி இன்பருலகும் ஏக இறைவனை இறைஞ்சுகிறேன்.

அன்பின் வாழ்வே இன்ப வாழ்வு

# பக்தியின் மாண்பு

## பகுதி 2

## கௌதமர் சாபமும் தேவேந்திரன் துயரமும்

நம் ஹிந்து புராணங்களில் உலகங்களை மேலுலகம் பூவுலகம் கீழுலகம் என்று மூன்று முக்கிய பாகங்களாக வரையறுக்கின்றனர். அதில் மேலுலகத்தை இம்பர் உலகம் என்றும் தேவர் உலகம் என்றும் வழங்குவதுண்டு இத்தேவர் உலகத்து மன்னனை தேவேந்திரன் என பெருமை பாராட்டிப்புகழ்வர்.

மேலும் இவரைக் கீழ்த்திசைக்கு அதிபன் என்று வரையறுத்துக் கூறுவாரும் உளர் இவர் எவ்விடத்துக்கு அதிபராயிருப்பினும் தேவர்களென்றும் தேவேந்திரனென்றும் புராணங்களில் பல இடங்களிலும் புகழ்ந்திருப்பதைக் காணலாம். ஆகவே தேவேந்திரன் என்று ஒருவர் உண்டு என்று நம் மூதாதையோர் சொல்லுக்கிணங்க ஒப்புக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது.

ஒருக்கால் இவர் கௌதம பத்தினியாகிய அகல்யாதேவியிடம் ஆசைகொண்டார் மாற்றான் பெண்டிரை மணக்கக்கோருவது கொடிய பாவங்களிலொன்றென காமவெகுளியால் அவருக்குத் தென்படவில்லை இதற்காக பலநாள் முயன்றும் பயனற்றன. ஒருநாள் தன் எண்ணம் ஈடேற நள்ளிரவில் ஓர் சேவல் கோழியின் வடிவெடுத்து கௌதமர் ஆசிரமத்தில் வந்து கூவினார்.

வைகறைப்பொழுதாயினவென வேதியர் திடுக்கிட்டு ஸ்நானத்துக்காக வெளிச்சென்றார். உடனே தேவேந்திரன் உள்ளே புகுந்து அகலி யாவை மணந்து கொண்டான்.

முனிவர் கங்கையை அணுகியதும் அதன் நித் திரையைக் கண்டு நேரமாகவில்லையென ஆசிரமத்தை அணுக, இந்திரன் பூனை வடிவமாக புறம் சென்றான் பூனையை இந்திரன் என்று இருடி ஞான திருஷ்டியால் அறிந்து, உடல் முழுவதும் பெண் குறியாகப் போகக் கடவதென கூறியதோடு அகலியா தேவியையும் கல்லாய் சமையக் கடவாய் என்று சாபம் செய்தார்.

இதைக்கேட்டு நடுக்கங்கொண்ட தேவி அடிபணிந்து, அடியேன் இவ்வுரு எடுப்பது எந்நாளென்று வடித்த கண்ணீருடன் மடித்த வாயுடனும் வேண்டினாள் அதற்கு முனி, அறியாமற் செய்த உன் பிழைக்காக ஒரு காலத்தில் தசரதபுத்திரராய் அவதாரம் செய்யும் ஸ்ரீராமபிரான் திருவடிகள் தீண்டப்பெற்றதும் முக்தியடைவாய் என்றார்.

பின் சாபத்தால் வெளிவர வெட்கம் பூண்ட இந்திரன் முனிவரின் பாதத்தில் தண்டனிட்டு சிறியேன் அறியாமற் செய்த பிழை பொறுத்து ஓர் ஆறுதல் மொழி தரவேண்டுமென்று இரங்கினான். முனிவரோ மனமிரங்கி மும்மூர்த்திகளும் ஒருங்கே இருக்கும் தருணம் சென்று பூஜித்தால் புனித உடம்பாவாய் என்று உகந்த மொழி கூறி அனுப்பினார்.

இதனால் தேவபதி ஒருவாறு தேறுதல் அடைந்தாலும் அதுகாறும் நாம் வெளிவருவது எங்ஙனம்? அந்நியப்பெண்டிரை ஆசிப்பதால் வரும் பயன் இதுவோ? அரசராயிருந்தும் தேவபதியாயிருந்தும் யாது பயன்?

காமத்தால் இவ்வித இடுக்கண் பெற்றேன்! வதை செய்யாமல் விட்டதே நம் பாக்கியமென நினைத்து, தனது அரண்மனையின் உட்பரிகையில் சென்று உடம்பைப் புதைத்து பஞ்சணையில் படுத்துக் கொண்டான்.

இதை அறிந்த நாரதர் இந்திரனிடம் சென்றார். நாரதரைக் கண்டதும் அடிபணிந்து நடந்ததைக் கூறி அடியேனது அகத்துயரை அகற்றித்தரவேண்டு மென்று இரங்கினார். அதற்கு நாரதர் இசைந்து அங்கிருந்து மறைந்தார்.

## நாரதர்கூற்றும் அரசின் வரிசையும்

ஞானகான வனத்தில் வசிக்கும் அத்திரிக்கு அருள் கொடுத்து மும்மூர்த்திகள் மறைய உன்னுகையில் நாரதருக்கு தேவேந்திரன் கூறியது ஞாபகத்தில்வர உடனே அங்கு சென்று அவர்களை அடிபணிந்தார். வணங்கிய நாரதரைப் பார்த்து யாது விசேஷமென மும்மூர்த்திகள் கேட்டனர். அதற்கு நாரதர் தேவரீர்களே! தேவபதி தனக்கு நேர்ந்த சாபத்தால் மிக வருந்துகிறான். அவன் பேரில் கருணைகூர்ந்து கௌதமர் கூற்றுக்கிணங்க அவனது துன்பத்தை துடைக்க வேண்டுமென வேண்டினார்.

இதனை அருகாமையிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த அத்திரி முனிவரும் கீழ்வருமாறு கூறினார்யான் ஹிமயமலையில் செய்த யாகசாலையில் வைத்து அவனைக் கண்டதும் அளவிலா வருத்தம் கொண்டேன். அதனால் அவனது துன்பத்தை அகற்றி ஆதரிக்க வேண்டுமென்று நாரதர் சொல்லுக்கு இசைந்து கூறினார்.

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் மூவரும் சம்மதித்து இந்திரனை அழைத்து வரும்படி நாரதரை அனுப்பிவிட்டு பிரஞ்ஞாத தீர்த்தக்கரையின் தென்பக்கத்திலுள்ள அரச மரத்தடியில் அமர்ந்தனர் இவர்கள் தங்கியது எவ்வாறெனில்

மூலதோ பிரம்மரூபயா மத்தியதோ விஷ்ணுரூபிணே
அகர தச் சிவரூபாயா விருக்ஷராஜபதே நம

என்ற தன்மையில் ஆயிருந்தது. இதனாலேதான் இம்மரத்திற்கு வரிசையும் இம்மந்திரம் ஏற்பட்டது. தவிர இதைஅசுவஷ்தமரம் மற்ற மூன்று யுகங்களிலும்துளசி, வில்வம், சரக்கொன்னை என்ற வடிவாய் முறையே மாறிவிடுகிறது. ஆகவே இக்கலியுகத்தில் சரக்கொன்னை வடிவில் இம்மரம் பட்டு நிற்பதை இவ்வூர் ஆலயத்தில் இன்றும் கண்டு மகிழலாம். இதற்கு கொன்னையடி என்று இப்போது வழங்குகிறார்கள்.

## இந்திரன் வருகையும் நந்திதேவரின் மறுப்பும்

தம் அரசருக்கு நேர்ந்த ஆறாத்துயரத்தால் கவலையோடிருக்கும் தேவர்கள் வீதிகளைக் கடந்து சென்ற நாரதரை அழைத்து வந்து மனவாட்டத்தோடு மஞ்சத்தில் அமர்த்தினர். உடனே நாரதர் வருத்தம் வேண்டாமென நடந்த நிகழ்ச்சிகளை நவின்று ஞானாரண்யத்துக்கேகும்படி கட்டளையிட்டு அங்கிருந்து அகன்றார். இது கேட்ட இந்திரன் மிக்க மகிழ்ச்சியுடன் ஐராவதமென்ற தன் யானையை முன் நடத்தி ஆறு குதிரைகளைப் பூட்டியதும் அலங்காரம் அமைக்கப் பெற்றதுமான பொற்றேரில் ஏறி நாற்புறமும் படைகள் சூழவும், பற்பல வாத்தியங்கள் முழங்கவும் பிரஞ்ஞாத தீர்த்தங்கரையின் வடபாகம் வந்து இறங்கினான்.

அங்கே தனது தேரையும் படைகளையும் நிறுத்திதான் மட்டும் ஐராவதத்தோடு பிரஞ்ஞாத தீர்த்தக் கரையில் வந்தான் அரசமரத்தன்மையில் போகும் போது வழியில் நின்ற நந்திதேவர் மறுத்தார் இந்திரன் இரங்கியும் இயலவில்லை நந்திதேவரோ, உன் பெருமையான வருகையால் பயனில்லை; குலகுருவின் அருள் பெற்றாலன்றி அவர்களைக் காணமுடியாது என்று கூறி அவனை அனுப்பி விட்டார்.

இந்திரன் தேர் முதலியவைகளை தங்க வைத்த இடம் தேரூர் என்ற பெயரோடு வழங்குகின்ற ஓர் ஊர் இதன் வடபாகம் இருக்கிறது மேலும் அவரை மறுத்த நந்திதேவரை கோபுர வாயில் பக்கத்திலே இன்னும் காணலாம்.

## வரை ஏறுவதும் வரம் பெறுவதும்

இந்திரன் நந்தி தேவரிடம் எவ்வளவோ கெஞ்சியும் எண்ணம் ஈடேறாததால், கீழ்ப்பக்கம் தோன்றும் மலையில் சென்று தன் குலகுருவாகிய பிரகஸ்பதியை நினைத்து தவம் செய்தான் தவத்துக்காக அம்மலையில் ஓர் குளமும் குழித்தான், தவத்தைக் கெடுக்கஸப்த கன்னியர்கள் வந்து தம்மால் இயன்ற முயற்சி செய்தனர். அஃது பயன்படவில்லை முடிவில் தபோநிலையின் மஹிமையை அறிந்த பிரகஸ்பதியே இங்கு வந்தனர். மருத்துவான் மனம் பூரித்து அவர்முன் அடிபணிந்து நின்றான்.

உடனே பிரகஸ்பதி இந்திரனைப் பார்த்து இவ்வாறு கூறினார். தேவபதியே! நீ நினைத்த காரியம்

தடையில்லாமல் முடிவு பெற விநாயகரையும் நந்தி மன்னரையும் ஒருங்கே பூஜிக்க வேண்டும் பிறகு அவர்கள் தங்கி இருக்கும் அரசமரத்தையும் பூஜித்து அம்மரத்தின் எதிராக ஓர் நெய்க்கொப்பரையில் நெய்விட்டுக் காய்ச்சி அதில் இறங்கி பஞ்சாட்சர மந்திரத்துடன் ஆயிரத்தெட்டு தடவை அச்சமின்றி மூழ்க வேண்டும் இங்ஙனம் நீ செய்வாயானால் உனது பக்தியின் மாண்பைக் கண்டு கடவுள் ஸான்னித்தியமாகி உனது உடம்பை புனிதமாக்குவார் என்று கூறி ஆசிர்வதித்து மறைந்தார்.

இங்ஙனம் மருத்துவான் தவம் செய்த மலை மருந்துவாமலை என்ற பெயரோடு இவ்வூரின் கீழ்த்திசையில் காணலாம் அங்கே தேவேந்திரன் தவம் செய்த தேவேந்திரன் பொத்தையும், தேவேந்திரன் சுனையும் உண்டு மருந்து வகைகள் பல இம்மலையில் இருப்பது பற்றி மருந்துவாழ்மலை என மறுபெயர் புனைந்து கூறுவாரும் உளர். சித்தர்கள் தவமிருக்க வந்ததால் சித்தசைலமென்றும் அழைப்பதுண்டு.

## கோட்டாறும் கொடிய சாபமும்

வரம் பெற்ற வானேந்திரன் வந்து நதியை பூஜிக்க நினைத்தான் ஆனால் நதியில் ஸ்நானம் செய்து பூஜிப்பதே புண்ணியமெனக் கருதி தனது யானையிடம் மலையில் சென்று போதுமான ஜலம் கொண்டுவரக் கட்டளையிட்டான். உடனே யானை வடதிசையை நாடிச்சென்றது அங்கு மலையை அணுகி இரண்டாகப் பிளந்து உட்பக்கம் இருந்த ஊற்று நீரை தன் நான்கு கோட்டுகளாலும் தரணியைக் கிழித்து அதன் வழியாக

அமரபதி அமரும் ஆரண்யத்தில் கொண்டு வந்து சேர்ந்தது.

இதனால் வரண்டிருந்த ஞானதாரண்யம் முழுவதும் நீர்வளம் பொருந்தி செழிப்புற்றதால் அத்திரி முனிவருக்கும் அடங்கா மகிழ்ச்சி எற்பட்டது. இத்துடன் இந்நதி தீர முழுவதும் நஞ்சைப் பயிர்களுக்குத் தகுதியாய் நஞ்சை நாடெனப் பெயர் வழங்கியது. இப்பெயர் வழங்கும்படி யானை கொணர்ந்த இந்நதியை தந்தநதி என்றும் கோட்டாறு என்று அழைத்து வருகிறார்கள்.

இவ்வாறு அரும் முயற்சியால் ஐராவதமானது நதியைக் கொண்டு வரும்போது அதன் ஓர் கொம்பு முறிவுபட்டது. இந்த வருத்தத்துடன் களைப்புடனும் பிரஞ்ஞாத தீர்த்தத்தின் மேல் பக்கம் ஓர் அரச மரத்தடியில் படுத்துக் கொண்டது சற்று நேரம் பொறுத்தும் தன் துதிக்கையால் அம்மரத்தில் ஓர்கிளையை ஒடித்தது. இக்கிளையோ அருகில் தவம் செய்து கொண்டிருந்த வேதவியாசர் மேல்பட்டது. உடனே வியாசர் தனக்கிடர் செய்தவன் கல்லாகப் போவதென சாபமிட்டு அங்கிருந்து அகன்றார்.

கோடு+ஆறு=கோட்டாறு. இக்கோட்டாறு பழையாறு என்ற பெயரோடு இதன் அருகாமையில் இருக்கிறது. தவிர கோட்டாறு என்ற ஓர் ஊரும் உண்டு. இது உற்பத்தியாகும் மலையை இரண்டாம்வரி மலையெனவும் கூறுகிறார்கள். மேலும் யானைப்பாறை என்ற பெயரோடு யானை வடிவமாகிய ஓர் பாறையும், அதன் பக்கத்தில் வேதவியாசநாயகர் என்ற ஓர் ஆலயமும் தெப்பக்குளத்தின் மேல் பக்கம் பார்க்கலாம்.

## முனிவர்கள் ஏக்கமும் முன்னூற்று நங்கை தோற்றமும்

இங்கு இவ்வாறிருக்க இந்திரன் தன் யானை கொண்டு வந்த ஜலத்தில் ஸ்நானம் செய்து நந்தி தேவரையும் விக்னேசுவரரையும் ஒருங்கே தியானித்து அவர்களது அன்பைப் பெற்றான் தன் குல குரு கூறியவாறு அரசமரத்தை வலம் வந்து பூஜித்து அதன் எதிராக தான் இறங்கி மூழ்கும்படியான வார்ப்பு ஒன்று அமைத்து அதில் போதுமான நெய்யிட்டுப் பொங்க வைத்தான்.

பக்தியின் மாண்பால் பரமரை நினைத்து பஞ்சாச்சரம் உச்சரித்து அச்சமின்றி அகம் தாவி ஆயிரத்தெட்டு தடவை மூழ்கினான்.

அந்தோ! பக்தியின் பெருமையை பகரவும் கூடுமோ? இந்திரனுக்கு எள்ளளவேனும் உஷ்ணம் தாவவில்லை. ஆனால் தேவர்களும் முனிவர்களும் வெப்பத்தின் வேவால் உயிர் போயிற்றென ஏங்கி இந்திரன் அமரும் இச்சுசீந்திரம் வந்து அடங்கா ஆச்சரியம் கொண்டனர் கடவுளைத் தியானித்து கவலையின்றி நெய்யில் மூழ்கிக் கொண்டிருக்கும் தேவபதியைக் கண்டதும் இவர் தேவபதியோ என ஏக்கமுற்றார்கள்.

நெய்யில் மூழ்கியும் கடவுள் ஸானித்தியமாகாததால் அக்கினியை வளர்த்து அதிலும் மூழ்க வேண்டுமென அமரபதி எண்ணினான் இதற்கு சாஷிகளாக துர்க்காதேவியும், அவ்வம்மையாரிடம் முக்கியமான முன்னூறு தேவர்களும் இருந்தனர்.

இத்துர்க்காதேவியை முன்னூற்றூ நங்கை என்ற

பெயரோடு இவ்வூர் தெப்பகுளத்தின் வடப்பக்கமிருக்கும் ஆலயத்தில் கண்டு தரிசிக்கலாம்.

### சாபமுத்தியும் சுசீந்திரமும்

இத்தருணம் மும்மூர்த்திகளும் இந்திரன் பக்கத்தில் அணுகி அமரலோகத்து அதிபதியே அன்னிய மாதரை ஆசித்ததால் அடைந்த துன்பத்தை அறிந்தீரா? ஆயினும் உன் அன்பான பக்தியால் அகமகிழ்ந்து இவண் வந்தோம் உன் உடம்பு புனிதமாக் கடவாய் என்று கூறி அவனது பூஜையை என்றும் அடைய விரும்புகிறோமென்று சொல்லி அவ்விடம் இருந்து மறைந்தார்கள்.

இவர்கள் கூற்றுக்கிணங்க இந்திரன் இச்சுசீந்திரத்தில் மும்மூர்த்திகளும் அடங்கிய ஓர் ஜோதி ரூபமாகிய சிவலிங்கம் பிரதிஷ்டித்து இன்னும் இவ்வாலயத்தில் பூஜை செய்து வருகிறார்.

இதனால் ஆலயத்தில் அர்த்த சாமபூஜை இல்லை மேலும் இந்த சிவலிங்கத்துக்கு நாள்தோறும் நடத்தும் அபிஷேகத்தில் சற்றேனும் நமக்கு காண முடியாது அத்தீர்த்தம் பாய்வதற்குரிய கோமுகியும் இங்கில்லை அர்த்த சாமபூஜை அமராபதிக்கானதால் இன்று மாலை பூஜை செய்தவர் மறுநாள் காலையில் நடைதிறக்கக் கூடாது. ஆகவே ஆலயத்தில் பூஜை செய்வதற்கு இருவர் அமைந்திருக்கின்றனர்.

காலையில் நடை திறக்கும் போது அகம்கண்டது புறங்கூறேன் என்ற வாக்குறுதி செய்தே வாயில் திறக்க வேண்டும் இவர்கள் சுசுபுரம், பெருமணல், இருஞாலக்கோடு என்ற பெருமை பொருந்திய

மடங்களிலுள்ள மறையவர்களாகும்.

இங்ஙனம் இந்திரனது உடம்பு பக்தியால் புனிதமானது இவ்விடத்தே ஆகும். ஆகவே இதற்கு சுசீந்திரம் எனப்பெயர் வழங்கியது.

சுசி+இந்திரன்=இந்திரன் சாபம் நீங்கி சுசியான இடம் இவருடைய பிரதிஷ்டைய மூலஸ்தானம் என்று இப்போதும் இயம்புகிறார்கள் மேலும் அவர் நந்தியையும் விக்னேசுவரையும் ஒருங்கே தியானித்ததால் ஆலயத்தில் இந்திர விநாயகர் என்ற ஓர் விநாயகர் கோவிலும், அவர் முன் நந்திதேவரையும் பார்க்கலாம்.

இந்திரன் நெய்யில் மூழ்கி புனிதமாகிய இவ்வூர் ஆலயத்தில் தீங்கு செய்தோர் நெய் முக்க வேண்டும் என்ற ஓர் வழக்கம் வெகுகாலமாக நடந்து வருகிறது. அஃது 1839 முதல் 1849 வரையில் 10 வருஷ காலம் பக்தியுடன் ஆண்டுவஞ்சி நாட்டை வளம் பெறச் செய்து சுகபதம் அடைந்த சுவாதித்திருநாள் ராமவர்மமன்னரின் அரியமனதுக்கிணங்க அழிந்து விட்டது.

இவ்விதம் பேர்போன இவ்வாலயத்தில் பக்திவைப்போர் இகத்தில் இன்பம் அடைந்து முக்தியடைவர் என்பது திண்ணம்.

பக்தியின் மாண்பே பாரதர் மாண்பு

முற்றிற்று

## பொது

பல்வகை மரங்களால் நிறைந்த இக்கானகம் வழியே நடந்து செல்லும் ஓர் ஆயர் மகளிர்க்கு மூங்கில் எப்போதும் இடரியியற்றியே வந்தது. இதனால் அவள் கொண்டு போகும் தயிர், பால் முதலியன அமைந்த மண்பாண்டங்கள் உடைவுபட்டே வந்தன நாள்தோறும் நடைபெறும் இத்துன்பத்தை அகற்ற ஒரு நாள் அவள் தன் கணவனோடு தன் தோழர்களோடு இவண் வந்து இந்த மூங்கிலை முறிக்க அதிலிருந்து இரத்தம் பெருகிவிட்டது. இதனால் அவர்கள் ஆச்சரியமுற்று ஜோதி லிங்கமேயென உணர்ந்து ஆனந்தம் அடைந்தனர். இது முதல் இவ்வூரில் ஆலயம் ஏற்பட்டதென்று கூறுகிறார்கள்.

ஆலயத்தில் கடவுளை ரூபத்திலும், அரூபத்திலும், தேவேந்திரன் பிரதிஷ்டித்த மூலஸ்தானத்திலும், கொன்னையடியிலும் அத்திரி முனிவர் பிரதிஷ்டித்த கைலாசத்திலும் ஜோதிலிங்கமானது ரூபாரூபத்திலும் இலங்குகிறது.

மேலும், பாண்டி நாட்டைப் பெருமையுடன் அரசாட்சி செய்து வந்த திருமலை நாயக்கரது திருவருளால் அமையப்பெற்ற திருமாலும், நாஞ்சிக்குறவனது நன் முயற்சியாலாக்கப் பெற்ற முருகக் கடவுளும், இராமர், வீரபுத்திரர் ஹரிஹரபுத்திரர் முதலிய ஏனைய பிரதிஷ்டைகளும் ரூபத்திலேயே அமையப் பெற்றனவாகும்.

தவிர ஆன்ற பக்தியோடு ஆலயத்தில் வருபவளும், வேளாள மரபில் உதித்தவளும், அறம்வளர்த்தாள் என்னும்

பெயரினை உடையவளுமான ஓர் பெண்மணியை கடவுள் விரும்பிக் கேட்டதும் இவ்வாலயத்திற்கு உள்ள சம்பந்தத்தை சாற்ற வேண்டியதில்லை.

இதனாலேயே இவர்கள் அறம் வளர்த்தம்மன் என்ற பெயரினையுடைய ஓர் ரூபபிம்பம் பிரதிஷ்டித்து இத்தருணம் தேரூர், இரவிபுதூர் என்னும் ஊர்களிலிருக்கும் அக்குடும்பத்தார்கள் குதூகலத்துடன் அம்மனுக்கு பட்டு படுக்கை முதலியான கொண்டுவருவது பார்க்க வேண்டியதோர் காட்சியாகும்.

இத்தன்மை வாய்ந்த இதன் பெருமையைக் கேள்வியுற்ற பெரியார் ஒருவர் இவண் வந்து மிகுந்த திரவியம் செலவுசெய்து நன்னிலையில் ஆக்கியதுண்டு. அவரே தெற்குமண்டபத்து போற்றி என்னும் தயாள சீலர் ஆவர் பலமண்டபங்களும் மற்றும் செய்ததோடு முன்பக்கம் ஓர் அழகிய சிறு மண்டபமும் கட்டினார். ஆகவே அவரது உருவம் வாயிலில் விளங்குகிறது.

இத்துடன் திருவாடுதுறை ஆதீனத்தார்களும் சோழ அரசர்களும், பற்பல பெருந்தகையோர்களும் தங்கள் பக்தியை நிலைநாட்டியிருக்கிறார்கள் என்பது இங்கேயும் கல்வெட்டுகள் சான்றாகும்.

இதில் மிகுந்த பக்திபூண்டொழுகியவர் பிரம்மஸ்ரீ வட்டப்பள்ளி ஸ்தானிகர் ஆதலால் அவர்களே இவ்வாலயத்திற்கு பொறுப்புடையவர் தெற்கு மண்டபம் போற்றி அவர்களுக்கும் பொறுப்புண்டு வெனப் புகழ வேண்டியதில்லை இங்கேயுள்ள மண்டபங்களினுடையவும் பதுமைகளுடையவும் சித்திர வேலைகளை கவனிக்குங்

கால் பாரா துயர்களாகி நம்மவர்களுக்கு ஓர் பெருமையை அளிக்கும் (என்பதற்கு சற்றேனும்) ஐயமில்லை இங்ஙனம் நம்மவர்களுக்கு ஓர் பொறுமையும் பக்தியையும் அளிக்கும் இவ்வாலயத்தில் பஞ்சபாண்டவர்களில் ஒருவரும் கண்ணபிரானின் அன்புக்குறவுடையோரும் ஆகிய அர்ஜுன பிரான் வந்து ஓர்பதக்கம் காணிக்கையாக வைத்தார் என்றும் பரசுராமர் தன் பாவத்தைத் தீர்த்தார் என்றும் கழறுவது ஓர் பெருமையன்று.

நாட்டார்களாலும் யோகக்காரர்களாலும் மற்றும் பொறுப்புடன் போற்றப்பட்டு வந்த இந்த ஆலயத்தை, சேர பரம்பரையில் தோன்றியவர்களும் சீர்மையாகிய குணங்கள் அமைந்தவளுமாகிய ராணி லெஷிமிபாய் என்ற அரச உத்தமி தமது ஆளுகையில் அமர்த்திக் கொண்டார்.

தற்போது அப்பரம்பரையில் அவதரித்தவரும் பஞ்சமென்பதை பறக்கச்செய்து வஞ்சிக்கோர் அணிகலனாய் விளங்குபவரும், முடிதரித்த மூவேந்தர் களிலும் பெருமை பெற்ற சேரமன்னர்களில் சிறப்புற்ற வருமாகிய ஸ்ரீசித்திரை மன்னரின் நற்சிந்தைக்கிணங்க நலம் பெற்று இலங்குகிறது.

சித்திரை இத்திரை நீடூழி வாழ்க

முற்றிற்று

# கன்னியாகுமரி

யான் சுசீந்திர ஸ்தலமகிமை எழுதி முடித்ததும் சில பெரியோர்கள் கன்னியாகுமரியின் ஸ்தல மகிமையை இத்துடன் கூறவேண்டுமென விரும்ப அதையிட்டும் சுருக்கமாக அங்குள்ள பெரியோர்களுடன் இருந்து கிடைத்த அறிவால் கூறிக்கொள்கிறேன்.

முற்காலத்தில் முகாஸூரன், வணாஸூரன் என்ற இருவர்கள் இம்பர்களை பலவாறு இடுக்கண் இயற்றி வந்தனர். இதைப் பொறுக்க முடியாததேவர்கள் பல பேர்களிடத்தும் தாங்கள் குறைகளைக் கூறியும் பயனற்றமையால் காசி விசுவநாதரை அடைக்கலமாய் அடைந்தனர்.

விசுவநாதர் இவர்களுடைய இன்னலைப் போக்கி இன்பம் அடைவிக்க, தனது சக்தியாகிய காளியை கல்கத்தா என்று கூறும் காளி கட்டத்திலும், அம்சமாகிய பகவதியை கன்னிகை உருவாக தெக்கணமாகிய இவ்விடத்திலும் அனுப்பி விட்டார் இங்ஙனம் மகேஸ்வரி கன்னிகையாகித் தங்கிய ஸ்தலமே கன்னியாகுமரியாகும்.

இன்னும் அங்கு நடைபெறும் புரட்டாசி மாதம் நவராத்திரியன்று அம்பாள் உச்சைசிரவஸ் என்னும் அமராபதியினது அசுவத்தில் அமர்ந்து அமர்க்களம் அடைவதை அம்புசாத்தல் என்று அழைத்து ஓர் விழாவை நடத்துவதுண்டு.

இத்தேவியின் திவ்விய அழகைக் கண்டு திருமூர்த்தியானவர் மணம் செய்ய மனதில் நாடி இக்கன்னியாகுமரிக்கு வந்தனர். இதை அறிந்து

தேவர்களும் முனிவர்களும் இங்கு வந்து கூடினார்கள். இவர்கள் யாபேரும் களிப்புடன் அமர்ந்த இடம் கன்னியாகுமரியாகும். அக்கூட்டத்தில் வைத்து மும்மூர்த்தியானவர் தம் கருத்தை வெளியிட ஏனையோர் அதற்கு ஒருவாறு ஒப்புக்கொண்டார்கள்.

ஏனெனில் கன்னிகாதேவிக்கு கல்யாணம் நடக்குமாயின் சக்தி குறைந்து அசுரர்களை அழிக்க முடியாதே என்ற வருத்தமானது தேவர்களுக்கு இருப்பினும் திருமூர்த்திகளது திருவாக்கைத் தட்டுவது தவறென நினைத்தே ஒருவாறு ஒப்புக் கொண்டார்கள்.

இது இவ்வாறிருக்க திரிகாலஞானியாகிய நாரதர் இவண் வந்துற்றார். அவரிடம் அமரர்கள் நடந்த நிகழ்ச்சியைக் கூற, மன்றல் நடவாமலிருக்கும் பொருட்டு திருமூர்த்திகளும் பகவதியம்மனைப் பாணிக்கிரகம் புரிய கண்களில்லா தேங்காயும், காம்பில்லா மாங்காயும், நரம்பில்லா வெற்றிலையும், கணுவில்லா கரும்பும், இதழ் இல்லா புஷ்பமும் கொண்டுவர வேண்டுமென்று கூறினார். இதற்கு திருமூர்த்தி உடன்பட்ட உள்ளத்துடையவராய் அங்கிருந்து அகன்றார்.

தேவர்களோ, கல்யாணத்துக்குரிய உணவு முதலியவைகளை இக்கன்னியாகுமரியில் தயாரித்தனர்.

மும்மூர்த்தியோ தனது சக்தியின் ஸானியத்தால் நாரதர் கூறிய ஐவகைப் பொருளையும் எடுத்து நள்ளிரவில் இச்சுசீந்திரத்திலிருந்து ஒரு நாளிகை தூரம் சென்றதும், நாரதர் திடுக்கிட்டு சேவற்கோழியாக வந்து கூவினார். கோழியின் குரலைக் கேட்டதும் திருமூர்த்திகள் வைகறைப் பொழுதாயின. இனிபோவது வழுக்கு என நினைத்து திரும்பிவிட்டார்.

இங்ஙனம் திரும்பிய இடம் ஒரு பாறையில் வைத்தானதால் அப்பாறையை வழுக்கம்பாறையென வழங்கி இருக்கிறார்கள். இஃது சுசீந்திரத்தில் நின்றும் ஒரு மைல் கிழக்காக இருக்கிறது. இதில் கோழியின் கால் தடமும், திருமூர்த்தியின் திருவடியும் தென்படுகிறது. கன்னியாகுமரி சுசீந்திரத்தின் கிழக்கு திசையிலுள்ள கடலோரத்தில் இருக்கிறது.

மணக்கோலம் அடைந்த தேவியானவள் வெகு நேரமாகக் காத்திருந்தும் தேவனைக் காணாமையால் சாதம் முதலியவைகளை மண்ணாகவும் மணலாகவும் மாறும்படி செய்தாள் ஆகவே இப்போதும் இங்கேயுள்ள கடற்கரையிலுள்ள மணல், முழு அரிசி நொறுங்கிய அரிசி, தவிடு என்ற ரூபத்தில் அமர்ந்திருப்பதைக் கண்டு மகிழலாம்.

மேலும் சக்கரம், சாவித்திரி, காயத்திரி, கலைவாணி, கணபதி, கன்னிகை, தரணி, பிதிர், பிரமம், சிலை என்ற பதினொரு வகை தீர்த்தங்களால் இப்பாரத நாட்டின் தென்பாகமாகிய இக்கன்னியாகுமரி புகழால் விளங்குகிறது.

காசிக்கு போகிற பக்தர்களுக்கு கதி கிடைக்க வேண்டுமாயின் இக்கன்னியாகுமரியில் வரவேண்டுமென நம் புராணம் முறையிடுகிறது. இதன் உண்மையை ஆராய்வோமானால், காசியிலுள்ள விசுவநாதரை வணங்கியவர் அவரது அம்சமாகிய தேவியையும் வணங்க வேண்டுமென்பதாகும். இதை அறிந்தே பக்தர்கள் பலர் இந்த தலத்தை நாடி நாள்தோறும் வருகிறார்கள்.

இத்துடன் எனது நுண்ணிய கருத்தை குமரியின் அருளால் உங்கள் முன்னிலையில் கூறி முடித்துக் கொள்கிறேன்.

பல்லவி : த்ரிபிரஸுந்தரி ஜகத் ஸாவேரி—ஆதி
அம்பிகே பகவதி உன்
தெரிசனம் கண்டு மகிழ்ந்தேன்.

அனுபல்லவி : பரமே பரவெளியே
பரிபூரண ஒளியே
ஸுரமுனி ஸேவித
ஸுந்திர ஹரப்பிரியே

சரணம் : செறுத்த பிடியிடையில்
வெளுத்த வஸ்த்ரம் தரித்து

சிற்றாடை தன்னில் செறு
பாடகம் தண்டை தரித்து
திருத்த மனமிரங்கும்
இவளை ஒளிபொருந்தி
சின்னம் சிறியதாம்
செண்பகவிழ பன்னிகத்தாள்

முடுகுசந்தம் : பருத்தம் கொங்கையின் மீதில்
பதக்க முருண்டைசைய
பளபள நகை பவுன் மாலையுடன்சைய
திருத்தமான மூக்குத்தி
ஜகமெங்கும் ஒளிவீச
தேவி என்னுடன் கூடி
எதிர்த்து நின்றுரை பேச
கடற்கரை யோரத்தில்
கன்னி வடிவு கொண்டு
கையில் மாலையை வைத்து
கருணை விலாசம் கொண்டு
திடமுடன் பூசை செய்ய
தேவேந்திரனுமுண்டு
செய்யவே உந்தனருள்
திவ்விய அமுதமுண்டு

முடுகுசந்தம் மட மடன் றலைகளும்
சமுத்திரம் பிரகாசிக்க
மதி முகத்தில் கஸ்தூரி
திலகம் பிரகாசிக்க
தட தடன்றுமிய
வாத்தியங்கள் வாசிக்க
சகல முனிவர்களும்
பாதத்தை பூஜிக்க

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

முற்றிற்று















ஸ்ரீ ராம் புக் ஸ்டால், சுசீந்திரம்.

